ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜியின்

# மதுரமுரளி

**(தெய்வீக மாதப் பத்திரிகை)**

வேணு : 9 பிப்ரவரி 2004 கானம் : 7

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 99 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள் | 5 |
| 4. | வேத கதைகள் - 80 | 8 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 70 | 10 |
| 6. | பாலகர்களுக்கு ஒரு கதை -74 | 14 |
| 7. | மாலே மணிவண்ணா - 17 | 16 |
| 8. | பகவான் யோகிராமரும் சிறுமியும் | 19 |
| 9. | ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 18 (தொடர்ச்சி) | 25 |
| 10. | ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 101 | 28 |
| 11. | செய்திகள் | 31 |


_'ƠtS' [pq•'Y'O' QsS'oQS'S' 4C'\:$
BSSo ]StC'Yp'\Z'uRSSpYSR' ]peYSo$

பராக்ரமமுள்ள ஸ்ரீ ராமபிரான், ஸத்யத்தினால் எல்லா உலகங்களையும், தானத்தினால் ஏழைகளையும், சேவையினால் பெரியோர்களையும், தனது தனுஸினால் போர்க்களத்தில் சத்ருக்களையும் வெல்கின்றான்.

**- ஸ்ரீமத் ராமாயணம் - அயோத்யா காண்டம்.**

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனம்

ராகம் : கானடா தாளம் : ஆதி

### பல்லவி

*ரங்கநாத பரப்ரஹ்மணே நம:*
*ரங்கநாத பரப்ரஹ்மணே நம: (ரங்கநாத)*

### அனுபல்லவி

*பூலோக வைகுண்ட க்ஷேத்ரராஜ:*
*ரங்கநாயிகா ஹ்ருதய உல்லாஸ: (ரங்கநாத)*

### சரணங்கள்

*உபயகாவேரி மத்யேவாஸ:*
*உத்தம பாஷ்யகார ஆச்ரித:*
*உத்ஸாஹேன ஸதா கடாக்ஷக:*
*உன்னத யோகசயன: (ரங்கநாத)*

*ஸப்தப்ராகார மத்யே ராஜராஜ:*
*ஸகல வைஷ்ணவஜன மோஹக:*
*சங்கரஸேவித ஸரஸிஜசரண:*
*ஸதா உத்ஸவை: ஆனந்தித: (ரங்கநாத)*

*கோதாநாயக பரிமளரங்க:*
*காம:பூரித: தவதர்சனேன*
*தன்வந்தரீணா நித்யஸேவித சரண: ।*
*தீனமுரளீதர: தவபக்ஷமேவ ॥ (ரங்கநாத)*

---

நாமாவளி

*கஸ்தூரிரங்கா காவேரிரங்கா*
*பரிமளரங்கா ஸ்ரீரங்கா*
*கல்யாணரங்கா வைபோகரங்கா*
*மோஹனரங்கா ஸ்ரீரங்கா (கஸ்தூரி)*

சென்னை பிரேமிகபவனத்தில் டிசம்பர் 16-ந் தேதி முதல் டிசம்பர் 25-ந் தேதி வரை அத்யயன உத்ஸவம் நடைபெற்றது. தஞ்சாவூர் பாகவதஸ்ரீ ஸ்வாமிநாத ஆத்ரேயர் அவர்களால் காலையும், மாலையும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண பிரவசனம் நடைபெற்றது. பூர்த்தி நாள் அன்று ஆண்டாள் கல்யாணம் நடைபெற்றது.

மறுநாள், ஸ்ரீ ஸ்வாமிஜி குணசீலம் சென்றார்கள். கோவிலில் ஸ்ரீ ஸ்வாமிஜியை கருப்பத்தூர் ப்ரம்மஸ்ரீ சுந்தரேசன் அவர்கள் வரவேற்று ஸ்வாமி தர்சனம் செய்து வைத்தார். கோவில் திருப்பணி வேலைகள் மிகவும் அழகாக நடந்துள்ளதைக் கண்டு ஸ்ரீஸ்வாமிஜி மிகவும் சந்தோஷம் அடைந்தார்கள். அங்கிருந்து மஹேந்திர மங்கலம் சென்றார்கள். இந்த ஊரில்தான் பல வருடங்கள் காஞ்சி ஸ்ரீ பெரியபெரியவர்கள் (ஸ்ரீசந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள்) தங்கி தவம் இயற்றினார்கள். அந்த இடத்தை அப்படியே ஒரு கோவில்போல் பராமரித்து பூஜை செய்து வருகின்றார்கள். வெகு நாட்களாக, அந்த இடத்திற்குச் சென்று தர்சனம் செய்ய வேண்டும் என்ற ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஆசை அன்றுதான் பூர்த்தியானது. பிறகு காவேரியில் அனுஷ்டானம் முடித்துவிட்டு மணத்தட்டை கிராமத்திற்குச் சென்றார்கள். அங்கு வீதி ஆரம்பத்திலிருந்து நாம ஸங்கீர்த்தனத்துடன் ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு ஒவ்வொரு வீட்டிலும் பூர்ணகும்பம் கொடுத்தும், ஆரத்தி எடுத்தும் வரவேற்பு கொடுக்கப்பட்டது. அங்கு உபன்யாசம் செய்துவிட்டு இரவு ஸ்ரீரங்கம் வந்து தங்கிவிட்டார்கள்.

மறுநாள், அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து, 'ரங்கேச மாம்பாஹி' என்று நாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டே, வீதி பிரதிக்ஷணம் வந்தார்கள். பிறகு கிளம்பி தஞ்சாவூர் சென்று மஹாபெரியவாளின் ஆராதனையை ஒட்டி ப்ரம்மஸ்ரீ வாசு அவர்கள் ஏற்பாடு செய்திருந்த சதசண்டி ஹோமத்தில் கலந்துகொண்டார்கள்.

யானை மாலை போட்டு ஸ்ரீஸ்வாமிஜியை வரவேற்றது. அங்கும் சிறிது நேரம் பிரவசனம் செய்தார்கள். அன்று மாலை திருவையாறு சென்று தியாகப்ரம்மம் அதிஷ்டானத்தையும், சிவபிரகாச ஆனந்தகிரி ஸ்வாமிகளின் அதிஷ்டானத்தையும் தர்சனம் செய்தார்கள்.

மறுநாள் தஞ்சையிலிருந்து, கிளம்பி ஒசூர் வந்து சேர்ந்தார்கள். அங்கு நடந்த ராதாகல்யாண மஹோத்ஸவத்தில் கலந்து கொண்டுவிட்டு பெங்களூர் சென்றார்கள். சங்கீதா அபார்ட்மெண்ட்ஸ் ஸ்ரீ ராமசந்திரன் அவர்கள் கிருஹத்தில் நடந்த ராதா கல்யாணத்தில் கலந்துகொண்டு விட்டு சென்னை வந்தார்கள்.

3-1-04 அன்று ஆஸ்ரமத்தில் வைகுண்ட ஏகாதசி உத்ஸவம் கொண்டாடப்பட்டது. அன்று பகல் முழுவதும் ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் கோவிலில் அகண்ட மஹாமந்த்ர கீர்த்தனம் நடைபெற்றது. அன்று மாலை, கருடவாஹனத்தில் மாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீ பிரேமிகவரதனின் புறப்பாடும், இரவு திவ்யநாமஸங்கீர்த்தனமும் நடைபெற்றது. (தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

---

ஸ்ரீ ஹரி:

*108 திருக்குலத்தோர் திருக்கோயில் திருப்பணித் திட்டத்தின்*
*கீழ் நான்காவது திருக்கோயிலாக*
*மயிலாடுதுறை வட்டம் (குத்தாலம் அருகில்)*
*மாதிரிமங்களம் கிராமம் ஆதிதிராவிடர் குடியிருப்பிலுள்ள*

**ஸ்ரீ மஹாமாரியம்மன் திருக்கோயில்**
**அஷ்டபந்தன கும்பாபிஷேகம்**

நாள் : 18-03-2004 வியாழக்கிழமை

நேரம் : காலை 8.00 மணிக்கு மேல் 9.00 மணிக்குள்

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ।
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே ॥

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

*கேள்வி : அந்தணன் என்ற சொல்லிற்குப் பொருள் என்ன?*

பதில் : அழகான தன்மைகளை உடையவன் அந்தணன்.

*கேள்வி : ஆஸ்திகன் என்பவன் பல தெய்வங்களை வணங்குபவன் என்றும், பக்தன் என்பவன் ஒரே தெய்வத்திடம் பக்தி செய்பவன் என்றும் கூறுகின்றீர்கள். அப்படியிருக்க, திருவையாறு ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளை பக்தர் என்று குறிப்பிடுவது சரியா? ஏன் என்றால் அவர் கோவூரில் உள்ள சிவபெருமான் மீதும், திருவையாற்றில் உள்ள தர்மஸம்வர்த்தினி மீதும், லால்குடியில் உள்ள சிவபெருமான் மீதும் பாடியிருக்கின்றாரே!*

பதில் : முதலில் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். ஒரு தெய்வத்திடம் ஏகாந்த பக்தியுடைய பக்தன் மற்ற தெய்வங்களை நிந்திக்க மாட்டான். மற்ற தெய்வங்களிடம் அவனுக்கு வெறுப்பும் கிடையாது. கற்புள்ள ஒரு மனைவி என்றால் வேறு புருஷனை வெறுக்க வேண்டும் என்றோ, நிந்திக்க வேண்டும் என்றோ பொருள் அல்ல. அன்னிய புருஷர்களைப் பற்றி அவளுக்கு லட்சியமே இருக்காது. அதே சமயத்தில், ஒருவனுடைய மனைவி, தன்னுடைய கணவனுடைய தந்தை, தாய், சகோதர சகோதரிகளுக்கு உரிய ஒரு மரியாதையை தன்னுடைய கணவனை முன்னிட்டுக்கொண்டு கொடுப்பாள். அதுபோல், ஏகாந்த பக்தனும், சில சமயம் மற்ற தெய்வங்களைத் தன்னுடைய இஷ்ட தெய்வத்தின் பரிவாரமாக நினைத்து பக்தி செய்வான். இஷ்ட தெய்வத்திடம் பிரேம பக்தி. மற்ற தெய்வங்களிடம் மரியாதா பக்தி. ஸ்ரீ தியாகராஜர், ராமர் மீது பாடியிருக்கும் கீர்த்தனைகளுடைய எண்ணிக்கையையும் மற்ற தெய்வங்கள் மீது பாடியிருக்கும் கீர்த்தனைகளின் எண்ணிக்கையும் பார்க்கும்பொழுது மற்ற தெய்வங்கள் மீது பாடியுள்ள கீர்த்தனங்களின் எண்ணிக்கை ஒன்றுமே இல்லை என்பது விளங்கும். மேலும், இந்த கீர்த்தனைகளை பாடும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டதால் பாடியிருப்பார். ஆகவே, தியாகராஜரும் ஏகாந்த பக்தரே!

*கேள்வி : சில நாட்களாக நான் தீவிரமாக தியானம் செய்து வருகின்றேன். எனக்கு தாங்க முடியாத தலைவலி ஏற்படுகின்றது? இதற்கு காரணம் என்ன?*

பதில் : சரீரத்தில் அடிபட்டால் வலி ஏற்படுவது போல் ஏதாவது ஒரு விஷயம் நமது மனதை பாதித்தால் மனதில் வலி ஏற்படுகின்றது. அதுவும், ஒரு Emotional Injury தான். சரீரம் ஒரு நாள் அசதியாக இருக்கின்றது. ''இன்று உடம்பு முடியவில்லை'' என்று சொல்கின்றோம். சில நாள் சரீரம் ஆரோக்யமாக உள்ளது. ''நான் இன்று எவ்வளவு வேலை வேண்டுமானாலும் செய்ய முடியும்'' என்று சொல்கின்றோம். அதுபோல், சில நாட்கள் மனதும் உற்சாகமாக உள்ளது. சில நாட்கள் மனது மிகவும் உற்சாகமிழந்து இருப்பதையும் காண்கின்றோம். இதுபோல் மனதிற்கும், சரீரத்திற்கும் பல ஒற்றுமைகள் உண்டு. உடல் உழைப்பே செய்து பழகாத ஒருவன் திடும் என்று ஒரு நாள் பல மணி நேரம் உழைக்க ஆரம்பித்தான் என்றால் அது அவனிடம் பல வியாதிகளைக் கொண்டு வந்துவிட்டுவிடும். சிறிது சிறிதாகத்தான் உடல் உழைப்பை அதிகரிக்க வேண்டும். அதுபோல், இது நாள் வரை மனதைக் கண்டபடி உலக வாழ்க்கையில் அலைய விட்டுவிட்டு, திடீரென்று ஒருநாள் அதை தீவிரமாக ஒருமுகப்படுத்தினால் தலைவலி மற்றும் மனோவியாதிகள் ஏற்படத்தான் செய்யும். அவசரப்படக் கூடாது. சிறிது சிறிதாகத்தான் தியானம் பழகி வரவேண்டும். ஆனால், வாயைவிட்டு நாமஸங்கீர்த்தனம் எவ்வளவு மணி நேரம் செய்து வந்தாலும் தவறில்லை.

*கேள்வி : நான் சில நாட்கள் உணவை மிகவும் குறைத்து உட்கொண்டு வருகின்றேன். இது நன்மை பயக்குமா?*

பதில் : தூக்கம், உணவு, இவையெல்லாம் உடல் நன்றாக இயங்குவதற்கு மிகவும் அவசியமானவை. ஒருவன், உணவே சாப்பிடாமலோ அல்லது காலாகாலத்திற்கு உணவு உண்ணாமலோ இருந்தால் Ulcer போன்ற வியாதிகளில் கொண்டு போய்விட்டுவிடும். அதுபோல், தூக்கத்தை நாமாக சிரமப்பட்டு தவிர்த்து வந்தாலும் அது பல வியாதிகளில் நம்மைக்கொண்டு விட்டுவிடும். மஹான்கள் பலர் தூங்காமலும், உணவு உண்ணாமலும் இருந்திருக்கிறார்கள் அல்லது மிகவும் குறைவாக உண்டு, குறைவாகவே உறங்கி

உள்ளார்கள் என்றால், அவர்கள் தங்களுடைய தியான சக்தியாலும், சிறிது சிறிதாக சேகரித்து வைத்துள்ள தவவலிமையாலும் தங்களுடைய சரீரத்தை சித்த சரீரமாக மாற்றிக்கொண்டதே காரணம். சித்த சரீரம் உள்ள அவர்களால் சிறிது உணவு, சிறிது தூக்கத்துடனே ஆரோக்கியமாக இருக்க முடியும். அப்படியில்லாமல் உணவு உண்ணாமல் இருப்பதோ, தூங்காமல் இருப்பதோ விபரீதத்தில் கொண்டுபோய் விட்டுவிடும்.

ஸ்ரீ ஹரி:

## சந்தாதாரர்கள் கவனத்திற்கு

மதுரமுரளி மாத இதழுக்கான தங்களுடைய சந்தா எண் இந்த மாத மதுரமுரளி envelope மீது ஒட்டப்பட்டுள்ள address labelல் இரண்டாம் வரியில் உள்ளது. உதாரணத்திற்கு ஒரு சந்தா எண்ணைப் பார்ப்போம்.

சந்தா எண் : 2004011234

10 எண்கள் கொண்ட இந்த சந்தா எண்ணில் முதல் 4 எண்கள் சந்தா முடிவடையும் வருடத்தையும் அடுத்த 2 எண்கள் சந்தா முடிவடையும் மாதத்தையும் கடைசீ 4 எண்கள் சந்தா எண்ணையும் குறிக்கும்.

மதுரமுரளி இதழுக்கான சந்தாவை, **''குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்'** என்ற பெயரில் மட்டுமே M.O. or DD. ஆக அனுப்பவேண்டும். தயவுசெய்து காசோலையாக அனுப்ப வேண்டாம். மணி ஆர்டரில் பணம் அனுப்பும்பொழுது, பெயர், முகவரி, மதுரமுரளி சந்தா எண் முதலியவற்றை (for Renewal) "Space for Communication"ல் கட்டாயம் எழுத வேண்டும்.

சந்தா எண், முகவரி இல்லாமல் வரும் சந்தா தொகையானது அவர்கள் பெயரில் எடுத்துக்கொள்ள இயலாது.

சந்தாதாரரின் முகவரியில் மாறுதல் ஏற்படும்பொழுது அதை அந்த மாதத்தின் 15-ந் தேதிக்குள் எழுதி அனுப்ப வேண்டும். 15-ந் தேதிக்கு மேல் வரும் முகவரி மாற்றத்தை அடுத்த மாதத்தில் தான் செயல்படுத்த முடியும். மாதத்தின் 1-ந் தேதிக்குப் பிறகு வரும் புதிய சந்தாதாரர்களுக்கு அடுத்த மாதம் முதல் தான் மதுரமுரளி அனுப்பமுடியும்.

Email-ல் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :
publications@madhuramurali.org

# வேத கதைகள் - 80

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## ப்ருஹத் ரதந்தர ஸாமாக்களின் பெருமை

இந்த பூலோகம், ஸ்வர்க்க லோகம் இவைகள் ஒரு காலத்தில் ஒன்றாகவே (கூடவே) இருந்தன. ஒன்றுக்கொன்று அன்பினால் ஒரே இடத்தில் இருந்தன. ஒரு சமயம் இந்த இரண்டும் ஏதோ ஒரு காரணத்தால் பிரிந்தன. பகையினால், ஒன்றுக்கொன்று வெகு தூரத்தில் இருந்தன. அப்பொழுது த்யுலோகத்தில் உள்ள பர்ஜன்ய தேவதை மழையை உண்டு பண்ணவில்லை. த்யுலோகத்தில் உள்ள சூரியனும் வெயில் என்ற ஒளியை ஏற்படுத்தவில்லை. அப்பொழுது தேவர்கள், மனுஷ்யர்கள் முதலான ஐந்துவிதமான ப்ராணிகள் இருளில் மூழ்கியவர்களாக ஒரு வழியையும் அறியாமல் ஒற்றுமை அற்றவர்களாக இருந்தனர். அப்பொழுது, இவ்விதம் துன்பம் அடைந்த பிராணிகளைப் பார்த்து, அந்த இரு உலகங்களும் ஒன்றுக்கொன்று சேர்ந்தன. இவ்விதம் ஒன்றுக்கொன்று சேர்ந்து ஒருவருக்கொருவர் உபகாரம் செய்வது என்று தேவர்களுக்குத் தகுந்த தேவ விவாஹத்தைச் செய்தனர்.

உலகில் விவாஹம் என்பது ஒன்றுக்கொன்று மாறுதலான சம்பந்தத்தை அடைவது. வரனின் தந்தை தன் பிள்ளையைப் பெண்ணின் தந்தைக்கு மாப்பிள்ளையாகச் செய்கிறான். பெண்ணின் தந்தையும் தன் பெண்ணை வரனின் தந்தைக்கு நாட்டுப்பெண் என்ற சம்பந்தத்தை செய்கிறான். இவ்விதம், மாறுதலான சம்பந்தத்தை செய்வதுதான் விவாஹம் என்ற சொல்லுக்குப் பொருள்.

*கோத்ராத் கோத்ராந்தர ப்ராபணம்*

ஒரு கோத்ரத்தில் பிறந்த பெண்ணை மற்றொரு கோத்ரத்தை அடைவிப்பது என்பதுதான் விவாஹம் ஆகும். இப்படி விவாஹத்தில் சம்பந்தம் செய்துகொண்ட பிறகு இருவரும் வீட்டிற்கு அழைப்பது, போஜனம், ஆடை அளிப்பது முதலிய உபசாரங்களைச் செய்கின்றனர்.

அதுபோல், இந்த இரு உலகங்களும் ஒருவருக்கு ஒருவர் உபகாரம் செய்கின்றன. இந்த த்யுலோகமானது இந்த பூமியை ப்ருஹத் ஸாமாவினால் மகிழ்விக்கிறது. இந்த பூமியானது ரதந்தர ஸாமாவினால் த்யுலோகத்தை மகிழ்விக்கிறது. இவ்விதம் இரு உலகங்களும் ஒருவருக்கொருவர் உபகாரம் செய்வதால் பர்ஜன்ய தேவன் மழை பெய்கிறார். சூரியன் ஒளியை அளிக்கிறான். மழையினால் பயிர்கள் வளர்ந்து ஜனங்கள் இன்பம் அடைகின்றனர். வெயிலால் இருட்டு விலகுகிறது. இந்த காரணத்தால்தான் வேதங்களில், ''இயம் வை ரதந்தரம் அஸோ ப்ருஹத்'' என்று கூறுவதால் ரதந்தர ஸாமா பூமியாகவும் ப்ருஹத் சாமா ஸ்வர்க்கமாகவும் வர்ணிக்கப்படுகிறது. இவ்விதம் இரு உலகங்களின் விவாஹத்தை அறிந்து கொள்பவர்கள் நல்ல குலத்தில் விவாஹம் அடைவார்கள்.

ஸ்ரீ ஹரி:

## எமது வெளியீடுகள்

**நூல்கள்**

1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருளுரைகள்
2. ஸ்ரீ ஸ்வாமிஜியின் பொன்மொழிகள்

**H.H. Sri Sri Muralidhara Swamiji's discourse series in Tamil : Cassettes, Audio CDs, VCDs**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் அமுத உரைகள் | Cassettes, VCDs |
| 2. திருப்பாவை | Cassettes, Audio CDs |
| 3. பகவான் ரமணரின் அக்ஷரமணமாலை | Cassettes, Audio CDs |
| 4. பகவான் ரமணரின் உபதேச உந்தியார் | Cassettes, Audio CDs |
| 5. Greatness of Bhagavan Ramana | Cassettes, Audio CD |

**கீர்த்தனங்கள்**

| | |
|---|---|
| 1. ஸ்ரீ ஸ்வாமிஜியின் கீர்த்தனங்கள் | Cassettes, Audio CDs |
| 2. மஹாமந்திரம்-அகண்ட கீர்த்தனம் | Cassete, Audio CD |

மிஷன் வெளியீடுகள் அனைத்தும் பிரேமிகபவனத்தில் கிடைக்கும்.

e-mail address for Books, Cassettes, CDs and Madhuramurali Magazine : publications@madhuramurali.org

# எந்தரோ மஹானு பாவுலு - 70

சுக்லாம்பர்ப்ரஹ்மச்சாரி, ப்ரபுவின் அனன்ய பக்தர். அவருக்கு மஹாப்ரபு தன்னிடம் போதிய அளவு கிருபை செய்யவில்லை என்று எப்போதும் ஒரு குறை இருக்கும். இதை உணர்ந்த மஹாப்ரபு ஒரு நாள் திடீரென்று, ''ப்ரஹ்மசாரி ஜி! நாளை நானும் நித்யானந்தரும் உங்கள் வீட்டில்தான் சாப்பிடப் போகிறோம். உணவு தயாரித்து வைத்துவிடும்'' என்று கூறிவிட்டார். சுக்லாம்பருக்கு, மஹாப்ரபு தன் வீட்டிற்கு வந்து சாப்பிடுகிறேன் என்று கூறியதில் ஒரு பக்கம் பேரானந்தமாக இருந்தாலும், மறுபக்கம் ''தான் ஒரு பிக்ஷு. தன் வீட்டில் ப்ரபுவிற்கு ஏற்ற உணவை எப்படித் தயாரித்து அளிப்பது'' என்ற வருத்தமும் ஏற்பட்டது. மற்ற பக்தர்களிடம் இந்தக் கவலையைத் தெரிவித்தபொழுது அவர்கள் ''ப்ரேமையில் என்ன நியமம் இருக்கிறது. நீர் அன்புடன் எதை சமைத்துக்கொடுத்தாலும் ப்ரபு ஏற்றுக்கொள்வார்'' என்றனர். ப்ரபுவும், சுக்லாம்பரரிடம் ''நாளைக்கு உன் வீட்டிற்குத்தான் வருவேன். நீ சமைத்து வைக்காவிட்டால் நீ சாப்பிடும் உணவைப் பிடுங்கித் தின்று விடுவேன்'' என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

அடுத்த நாள் சுக்லாம்பர்ப்ரஹ்மசாரி மிகவும் பக்தி ச்ரத்தையுடன் தன்னால் இயன்ற அளவு உயர்ந்த உணவு தயாரித்து வைத்தார். மஹாப்ரபுவும், நித்யானந்தரும் கங்கையில் நீராடிவிட்டு அவரது வீட்டிற்குள் நுழைந்தனர். அங்கு அன்புடன் அவர் அளித்த உணவை ஒவ்வொரு பதார்த்தத்தையும் மெச்சிக்கொண்டே சாப்பிட்டுவிட்டு சுக்லாம்பர் அளித்த நீரால் கை கழுவிக் கொண்டார்கள். ப்ரஹ்மசாரியின் குடில் கங்கைக் கரையில் இருந்தது. கங்கையின் சீதளமான காற்று வீச மாடியில் இருவரும் கட்டிலில் படுத்துக்கொண்டனர். விஜய்ஆகரியா என்னும் பக்தரும் அப்போது கூட இருந்தார். அவர், கிரந்தங்களுக்கு கைப்பிரதி எழுதிக்கொடுத்து தன் ஜீவனத்தை நடத்தி வந்தார். அவரது எழுத்து அழகாக இருக்கும். அந்த நாளில் அச்சகம் கிடையாதாகையால் புத்தகங்களுக்கு கைப்பிரதி எடுப்பதுதான் வழக்கம்.

விஜய்ஆகரியா, ப்ரபுவுக்கு நிறைய புத்தகங்கள் எழுதித் தந்துள்ளார். அன்று ப்ரபு அருகில் படுத்திருந்த விஜய்ஆகரியாவுக்கு ஒரு திவ்ய கனவு ஏற்பட்டது. அதில் அவர் மிக அழகிய ஒரு கையைப் பார்த்தார். அந்தக் கை சின்மயமாக இருந்தது. விரல்களில் விதவிதமான திவ்ய ரத்னங்கள் ஜ்வலித்தன. இந்த சின்மயமான கையை தரிசித்த விஜய் குதூகலமடைந்து எழுந்து உட்கார்ந்து நாற்புறமும் சுற்றிச் சுற்றிப் பார்க்க ஆரம்பித்தார். அப்போதும் அவருக்கு அந்தக் காட்சி மறையவில்லை. இந்த அத்புதமான லாவண்யத்துடன் கூடிய திவ்ய கரத்தின் தர்சனம் அவரைப் பித்தனாக்கிவிட்டது. ப்ரபு சிரித்துக்கொண்டே, ''என்ன விஜய்! என்ன விஷயம்! இங்கும் அங்கும் பார்க்கிறாய்! ஏதாவது அற்புதத்தைப் பார்த்தாயா என்ன? சுக்லாம்பர் பெரிய பக்தன், இங்கு கிருஷ்ணன் எப்போதும் நிறைந்துள்ளான், உனக்கு க்ருஷ்ண தரிசனம் ஏற்பட்டுவிட்டதா என்ன?'' என்று கேட்டார். விஜய் இதற்கு ஒன்றும் பதில் கூறாமல் இருந்தார். அவருக்கு தன் சரீர நினைவே இல்லை. ப்ரபுவின் பேச்சைக்கேட்டு பைத்தியம் போல் சிரித்தார், அழுதார், ஏதோ புலம்பினார்! நித்யானந்தருக்கும், ப்ரஹ்மசாரிக்கும் இது ப்ரபு, விஜய் மீது செய்துள்ள விசேஷ கிருபை என்று புரிந்துவிட்டது. இதே நிலையில் விஜய்ஆகரியா ஏழு நாட்கள் அழுதுகொண்டும், சிரித்துக்கொண்டும், தூங்காமலும் கழித்தார். அப்போது அவர் ப்ரபுவின் சில அந்தரங்க பக்தர்களிடம் தனது அனுபவத்தைப் பற்றிக் கூறினார்.

ஸ்ரீவாஸ்பண்டிதர் வீட்டிற்கு அருகில் ஒரு தையற்காரன் இருந்தான். தினமும் கீர்த்தனம் கேட்டுக் கேட்டு அவனுக்கும் மஹாப்ரபுவிடம் தீவிர அன்பும் பக்தியும் உண்டாயிற்று. ப்ரபு வரும்போதெல்லாம் அவருக்கு பக்தியுடனும் அன்புடனும் நமஸ்காரம் செய்வான். ஒருநாள், ப்ரபு அவனுக்கு தனது திவ்யரூப தர்சனம் தந்தார். அதைக் கண்டு களித்த அந்த முஸ்லீம் தையற்காரன், உன்மத்தனாகி கடைத்தெருவில் பலநாட்கள், ''பார்த்தேனே! பார்த்தேனே!!'' என்று கூவிக்கொண்டு திரிந்துகொண்டிருந்தான்.

இப்படி ப்ரபு தனது அந்தரங்க பக்தர்களுக்கு விதவிதமாக ப்ரேம லீலைகளைச் செய்து ஆனந்தத்தை அளித்தார்.

அவரது சரணாரவிந்தத்தில் த்ருடமான விச்வாசமுள்ள பக்தர்களுக்குத்தான் இப்படிப்பட்ட அனுபவம் ஏற்பட்டது. மற்றவர்களுக்கு அவர் சாதாரண நிமாயி பண்டிதராகத்தான் திகழ்ந்தார். சிலர் அவரை போலி என்று கூட ஏசினர்!

பகவானைப் பொறுத்தவரை அவனுக்கு அனைவரும் சமம்தான். யாரிடமும் விசேஷ ப்ரேமையோ த்வேஷமோ கிடையாது. ஆனால், வேறெதுவும் வேண்டாமல் அவனையே நினைப்பவர்களுக்கு அவன் கல்பக வ்ருக்ஷமாகி விடுகிறான் அல்லவா! பக்தர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதில் அவனுக்கும் ஆனந்தம்தான்! கல்பக விருக்ஷத்திற்கு அடியில் நின்றுகொண்டிருப்பவர்கள் எதை விரும்புவார்களோ அதைத்தானே அந்த வ்ருக்ஷம் தரும். அதுபோல், பகவானும் பக்தர்களின் மனோரதத்தை நிறைவேற்றுவான்.

இப்படி மஹாப்ரபு 12 அல்லது 13 மாதங்கள் கீர்த்தனத்தில் கழித்தார். காஜியை திருத்தி ஆட்கொண்டபிறகு, ப்ரபுவின் செயல்களில் மாற்றம் ஏற்பட்டது. அவருக்கு கீர்த்தனத்தில் சித்தம் செல்லவில்லை. பாதி பஜனையில் எழுந்து சென்றுவிடுவார். அவருக்கு இப்போது வேறு தேடல் ஏற்பட்டுவிட்டது. ஹாஸ்யம், கேலி எல்லாம் குறைந்து விட்டது. பக்தர்களுடன் உல்லாசமாக இருப்பதை நிறுத்திவிட்டார். திடீரென்று அழுவார், திடீரென்று சிரிப்பார். ஹே நாதா! ஹே ரமாநாத! ஹே கோவிந்தா! என்று கதற ஆரம்பித்தார்! ராதை **பா**வத்தில் அழுவார். அப்போது, ''ஹே க்ருஷ்ணா! நான் ராஸத்தில் உன் இனிமையான பேச்சுக்களில் மயங்கினேனே! அகில ஐஸ்வர்யத்திற்கும் ஸ்வாமியான நீ எங்கே! கள்ளங்கபடமற்ற எளிமையான ஏழை இடைப் பெண்ணான நான் எங்கே! ஹா ப்ராணநாதா! என்னுடைய ப்ராணனை உனக்கு அர்ப்பணித்து விட்டேனே! நீ கோமளமானவன், அழகன், ரஸரூபன், கருணை உள்ளவன். ஆனால், எனக்கு மட்டும் இப்படி கடினமானவனாகி விட்டாயே! என்னை இப்படி விரஹத்தில் தவிக்க விடுவதால் உனக்கு என்ன ஸுகம் கிடைக்கிறது?'' என்று மணிக்கணக்கில் புலம்பி அழுவார்.

திடீரென்று கோபீ **பா**வத்தில் அக்ரூரர் வந்து கிருஷ்ணனை அழைத்துச் செல்வது போல் நினைத்து அழ ஆரம்பிப்பார். ''ஐயோ!

நிர்தயமான கடவுளே! ப்ரேமையுள்ளவர்களை சேர்த்துவிட்டு ஏன் இப்படிப் பிரிக்கிறாய்? கிருஷ்ணா! நீ எங்களை விட்டுப் போயே விடுவாயா? இனி மனோஹரமான முரளியின் நாதத்தை எப்போது கேட்போம்? பீதாம்பரத்தின் ஒளியை இனி காணமுடியாதா? இனி எங்கள் வீட்டு வெண்ணையை உண்ண நீ வரமாட்டாயா? இந்த அழகு சுந்தரனின் முகத்தைப் பார்த்து ஒரு நாளின் தாபத்தைத் தீர்த்துக்கொள்வோமே! இனி அது முடியாதா? இந்த க்ரூரகர்மா நிரம்பிய அக்ரூரர் யார்? கடவுள், அக்ரூரர் இருவரில் யார் அதிக க்ரூரம் நிரம்பியவர்? இப்படி உரக்கக் கதறி அழுவார்.

சில சமயம், கிருஷ்ண **பா**வம் ஏற்பட்டு கோபர்களுடன் வ்ரஜ லீலையை அனுகரணம் செய்வார். சில சமயம், ப்ரஹ்லாத **பா**வம் ஏற்பட்டு ராக்ஷஸ குழந்தைகளுக்கு சிக்ஷை தருவது போல பக்கத்தில் இருக்கும் பக்தர்களுக்கு பகவன்னாம ஸ்மரணத்தையும் கீர்த்தனத்தின் பெருமையையும் எடுத்துரைப்பார். பூமியை விரஹம் நிறைந்த ஒரு ஸ்த்ரீயைப் போல் பிறாண்டுவார்.

ஸசீமாதாவுக்கு இவரது நிலையைப் பார்த்து கவலை ஏற்பட்டது. மகனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று கவலை கொண்டு வைத்யர்களை விசாரிப்பாள். மற்ற பக்தர்களிடம் தீனமாக, ''நிமாயிக்கு என்ன ஆயிற்று. இப்போது அவன் முன்புமாதிரி கீர்த்தனம் செய்வதில்லை. யாருடனும் சிரித்துப் பேசுவதில்லை. நீங்கள் எல்லோரும் அவனுக்கு ஏதாவது சிகிச்சை செய்யக்கூடாதா?'' என்று புலம்புவாள்.

அன்னையின் வெகுளித்தனமான இப்பேர்ப்பட்ட பேச்சுக்களைக் கேட்ட பக்தர்கள் சிரித்துவிட்டு, ''ஜகத் முழுவதற்கும் இவர் சிகிச்சை செய்கிறார்! இவருக்கு யார் சிகிச்சை செய்ய முடியும். இவரது ரோகத்திற்கு இன்றுவரை எந்த ஸம்ஸாரிக வைத்தியரும் மருந்து கண்டுபிடிக்கவில்லையே!'' என்று மனதில் நினைத்துக்கொள்வார்கள். எவ்வளவு முயன்றாலும் அவர்களால் அன்னையை சமாதானப் படுத்தவே முடியாது.

(தொடரும்)

**– ஜயந்தி ஜானகிராமன்**

# பாலகர்களுக்கு ஒரு கதை - 74

மிதிலையில் ஸ்ருததேவன் என்று ஒரு அந்தணர் வாழ்ந்து வந்தார். அப்பொழுது பகவான் ஸ்ரீக்ருஷ்ணருடைய அவதார காலம். அந்த ஸ்ருததேவருக்கு பகவான் ஸ்ரீ க்ருஷ்ணனிடத்தில் நல்ல பக்தி உண்டு. அதனால், உலக விஷயங்களில் பற்றற்று வாழ்ந்து வந்தார். கிடைத்த அன்னத்தை கொஞ்சமாக உண்டு வேதத்தில் சொல்லியபடி இல்லறம் நடத்தி வந்தார்.

அப்பொழுது அந்த தேசத்தை 'பஹுளாச்வர்' என்ற ஒரு அரசன் அரசாட்சி செய்து வந்தான். அவனுக்கும் க்ருஷ்ணனிடத்தில் பக்தி உண்டு. ஒரு நாள், ஸ்ருததேவர் பகவானைச் சென்று தர்சனம் செய்து தனது இல்லத்திற்கு வரும்படி அழைத்தார். பகவானும் இன்ன தேதியில் வருவதாக சொல்லிவிட்டான். இதைக் கேள்விப்பட்ட அரசன் ஆச்சரியமடைந்தான். ராஜாதி ராஜனான பகவான், தன்னுடைய தேசத்தில் வசிக்கக்கூடிய ஒரு ஏழை அந்தணன் வீட்டிற்கு வருவதை அறிந்து, அப்பொழுது தானும் பகவானை அரண்மனைக்கு அழைப்பதற்கு ஆசைப்பட்டான்.

பகவானை வரவேற்பதற்காக நகர எல்லையில் முத்துப்பந்தல் போட்டு, பல மங்கள வாத்யங்கள் முழங்க, மங்கள திரவியங்களுடன், வேத மந்திரம் ஒலிக்க, பகவானை அழைப்பதற்கு ஏற்பாடு செய்திருந்தான். ஊரே திருவிழாக்கோலம் பூண்டிருந்தது. நகர எல்லையில், பகவானை வரவேற்பதற்காக பக்தர்கள் காத்திருந்தார்கள். அந்தக் கூட்டத்தில் ஸ்ருததேவரும் நின்றிருந்தார். ரதத்தில் ஏறி அவ்விடத்திற்கு வந்த பகவான் இரண்டு பக்தர்களிடமும் சமமாக நடந்துகொள்ள விரும்பி இரண்டு உருவங்களை எடுத்துக் கொண்டார்.

ராஜஉடைகளுடன் அரண்மனைக்குச் சென்றார். ரத்ன கம்பளத்தை மன்னன் கீழே விரித்திருந்தான். க்ருஷ்ணரை ரத்னம் பதிக்கப்பட்ட தங்க சிம்ஹாசனத்தில் அமர்த்தி கனகாபிஷேகம் செய்து விலையுயர்ந்த பல பொருட்களை சமர்ப்பித்துத் தன்னுடைய சக்திக்கு

உகந்த வகையில் பகவானை பூஜை செய்தார். மன்னனுடைய பூஜையை ஏற்றுக்கொண்ட பகவான் அவருக்கு ராஜ தர்மங்களை உபதேசம் செய்தார்.

ஸ்ருததேவன், வாசலில் பூர்ணகும்பம் கொடுத்து அழைத்து, தனது மேல் துண்டைக் கீழே போட்டு அதில் பகவானை நடக்கச் செய்து தன்னுடைய அக்னிஹோத்ர சாலையில் அமரச் செய்து சாஸ்திர மரியாதைப்படி காலில் நீர்விட்டு பூஜை செய்து, தர்ப்பைப் புல்லினால் ஆன ஆஸனத்தில் அமரச் செய்தார். காய் கிழங்குகளைக் கொடுத்தார். பகவான் இங்கு ப்ரஹ்ம ரிஷிகளைத் தன்னுடன் அழைத்து வந்திருந்தார். அவர்களுக்கும் பூஜை செய்யச் சொன்னார். அந்தணரும் அவர்களுக்கு பூஜை செய்து மகிழ்ச்சி அடைந்தார். பகவான் அவருக்கு ஆத்ம தத்துவத்தை உபதேசம் செய்தார். அரசனுடைய அரண்மனைக்கு பகவான் போனது அந்தணருக்குத் தெரியாது. அந்தணர் வீட்டிற்குச் சென்றது அரசனுக்குத் தெரியாது. பகவான் இப்படி சமகாலத்தில் தன்னுடைய இரு பக்தர்களையும் சந்தோஷப்படுத்தினார்.

---

**ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி,** 11-11-2003 அன்று திரு. A.S. சத்தியமூர்த்தி அவர்கள் வீட்டில் ''ஹரே ராம...'' நாமகீர்த்தனம் ஆரம்பித்து வைத்தார்கள். இங்கு ப்ரதி ஞாயிறுதோறும் மாலை 4 மணிக்கு நாமஸங்கீர்த்தனம் நடைபெறும். அனைவரும் இதில் கலந்துகொள்ளலாம்.

விலாசம்

**திரு. A.S. சத்தியமூர்த்தி,** *புதிய எண். 9 (ப. எண்.4),*
*கலெக்டர் சிவகுமார் தெரு, கே.கே. புதூர்,*
*கோயம்புத்தூர் - 641 038 ✆ 0422-2447107*

இங்கு ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜியின் வெளியீடுகளான புத்தகங்கள், கேசட்டுகள் மற்றும் CDகள் கிடைக்கும்.

# மாலே மணிவண்ணா -17

**– மஹாவித்துவான், மயிலம் வே. சிவசுப்பிரமணியன்**

எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் எல்லாமாக நிற்கிறான். அவனில்லாமல் வேறெதுவும் இல்லை. எல்லாப் பொருள்களினும் கலந்து நின்று அப்பொருள்களின் இருப்பை உறுதி செய்கின்றவனும் அவனே. வேதம் 'விச்வ' சப்தத்தின் மூலம் இதனைத் தெரிவிக்கிறது.

அழிவற்றதாகிய வேதம் எழுதப்படாமல் என்றும் வாய்மொழியாக உள்ளபடியால் அதனை மாயா வாய்மொழி என்ற பரிபாடல் அழைக்கிறது. எம்பெருமானிடத்தில் சகலமும் தோன்றுகின்றன. எம்பெருமானால் எல்லாம் நிலைபெறுகின்றன. நிலைபேறு அடைகின்றன.

வேதம் தேவரும், ஐம்பூதங்களும், மூவேழுலகுகளும், உயிர்ப்பண்மையும் பிறவுமாகிய அனைத்தும் திருமால்கண் தோன்றியவற்றை அறிந்து ஒழுங்குறச் சொல்லும். ஆனால், சிற்றறிவுடைய யாம் அவற்றை முழுதும் கூற முடியாமல் சிலவற்றை மட்டும் சொல்லுகிறோம். அவற்றையும் தோன்றியவாறு கூறாமல் மாற்றி மாற்றிச் சொல்கிறோம். நாங்களாக எம் அறியாமையால் கட்டிச் சொல்கிறோமே அல்லாமல் அறிந்து கூற இயலாமல் இருக்கிறோம் என்று நம் அறியாமையைத் தம் மேல் வைத்துக் கவிஞர் கூறிக் கொள்கிறார்.

தீ, வளி, விசும்பு, நிலம், நீர் என்கிற ஐந்து பூதங்களும் என்கிறது பரிபாடல். தோற்ற முறையில் விசும்பு, விசும்பாகிய ஆகாயத்திலிருந்து வளி என்கின்ற காற்று, காற்றிலிருந்து தீ என்கிற நெருப்பு, நெருப்பிலிருந்து நீர், நீரிலிருந்து நிலம் என்று இப்படித்தான் கூறியிருக்க வேண்டும். ஆகாயம், காற்று, நெருப்பு, நீர், நிலம் என்பது தோன்றும் முறை. இதுவே, ஒடுங்கும்போது நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்ற வரிசையில் ஒடுங்கும். இந்த இருமுறையில் எதையும் பின்பற்றாமல் முறை பிறழக் கூறி நம் அறியாமையைப் புலப்படுத்தினர் கவிஞர்.

ஐம்பூதங்களும் சூரியனும் சந்திரனும் வேள்வி முதல்வனாகிய அறக்கடவுளும் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி என்று சொல்லப்பெறும் கிரகங்களாகிய ஐவரும். (ராகு, கேது என்பன சாயாக் கிரகங்கள்; காணப்படுவன அல்ல. உலக நடையில் காணப்படுவன ஏழு கிரகங்களே.)

காசிபனுக்குத் (காச்யபன்) திதியினிடமாகித் தோன்றிய அசுரர்களும், (காசிபனுக்கு அதிதி, திதி என்ற இரு மனைவியர். அவருள் திதியின் இடமாகத் தோன்றியவர்கள் அசுரர்கள், அதிதியின் இடமாகத் தோன்றியவர்கள் தேவர்கள்) ஆதிப்பிரமனுமக்குச் சங்கற்பத்தால் தோன்றிய பிரமர் பத்து பேர். அவருள் முதல்வர் காசிபர். (அவரால் தேவாசுரப் படைப்பு நிகழ்ந்தது) காசிபராகிய விதியின் மக்களாகிய சூரியர் பன்னிருவரும், குற்றமற்ற அட்ட வசுக்களும், உருத்திரராகிய கபிலர் பதினொருவரும்.

(உருத்திரரைக் கபிலர் என்றது கபில நிறம் உடையவர்கள். ஆதலின், கபிலை நிறம் என்பது கருமையும், செம்மையும் கலந்த நிறம் ஆகும். உருத்திரர், சிவபெருமானைப் போன்றவர்கள். சிவபெருமான் அர்த்த நாரீஸ்வரர் ஆதலின் வலப்பாகம் செம்மையும், இடப்பாகம் கருமையுமாக இருத்தலின் இரண்டும் கலந்த நிலையில் கபில நிறம் என்று சொல்லப் பெறும்) தேவர் மருத்துவர்களாகிய அசுவனி தேவர்கள் இருவரும் (இவர்கள் தாவும் குதிரையினிடத்துத் தோன்றியவர்கள். ஊர்வசி பெண் குதிரை ஆனாள்; அவளைக் கண்டு விரும்பி தானும் குதிரை வடிவெடுத்து அவளிடம் சூரியன் செல்கின்றபொழுது அவனுடைய மூக்குத் துளைகள் இரண்டின் வழியாக இரண்டு விந்துத் துளிகள் வீழ்ந்தன. அசுவனி தேவர் அங்கே இரட்டைகளாய்த் தோன்றினார்கள். ஆகையால், அவர்களைத் ''தா மா இருவரும்'' என்று பரிபாடல் கூறுகிறது.)

தருமனாகிய யமனும், அவனது ஆணையைச் செய்யும் மடங்கல் என்னும் கூற்றுவனும், (யமன் தலைமையாவான். அவன் வேலையைச் செய்யும் அவன் கீழ்உள்ள கூற்றுவன், காலன் என்போர் வேறு. நூல்களிற் பல இடங்களில் ஒன்றாக வழங்கப் பெறுவதுண்டு) பாதாளம், நடு, மேல் என்னும் மூன்றால் பெருக்கிய ஏழ் உலகம் எனப்படும். இருபத்தோருலகங்களும், அவ்வுலகங்களுள் உள்ள

பல்வேறு வகையான உயிர்களும் ஆகிய இவையெல்லாம் மாயோனாகிய உன்னிடத்திலிருந்து தோன்றிப்பரந்தன என்று வேதம் கூறுகிறபடியால் எங்களுக்குத் தோன்றிய முறையில் கூறி உன்னைத் தோத்திரம் செய்கின்றோம்.

நீயே வேதம், நின்னின் வேறல்ல வேதம். வேதமாகிய ஓடையின் கண் மலர்ந்த தாமரைப் பூ உனது உந்திக் கமலம் ஆகும். அவ்வுந்திக் கமலத்தில் தோன்றிய ஆதிப் பிரமனும் நீயே; அந்தப் பிரமனுக்குத் தந்தையாக இருப்பவனும் நீயே! என்று அந்தணர் அருமறை கூறுவது அறிந்து அவ்வாறே நாங்களும் உன்னைத் துதிக்கின்றோம். (படைப்பிற்கு முதலாக வந்து தாமரைப்பூ மலரும் என்பது வேதத்தால் அரியப்படுவது ஆதலின் வேதம் அத்தாமரைப் பூவிற்குக் காரணம் என்று சொல்லப் பெறும். அவ்வகையில் வேதமாகிய ஓடையில் மலர்ந்த தாமரை எனப் பெற்றது.)

*''ஆதிப்பிரமனும் நீ! ஆதிப் பரமனும் நீ!*
*ஆதி எனும் பொருளுக்கு அப்பால் உண்டாகிலும் நீ !*
*'சோதிச் சுடர்ப் பிழம்பு நீ!' என்று சொல்கின்ற*
*வேதம் உரை செய்தால், வெள்காரோ வேறு உள்ளார்?''*

என்ற கம்பர் பாடல் (கம்பர், கவந்தப் படலம் 43) இப்பரிபாடல் பகுதியை 'ஆதிப் பிரமனும், பிரமன் தந்தையாகிய ஆதிப் பரமனும் நீயே' என்று வேதம் உரை செய்கிறது என்று அப்படியே விளக்கி நிற்கிறதை அறிந்து மகிழலாம்.

---

## அறிவிப்பு

1. மதுரமுரளி விஷயமாக அனுப்பும் தபால்களின் கவரில் பின்வருமாறு முகவரியை கட்டாயம் எழுதவும்.

   ''மதுரமுரளி'', குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன், 24, நேதாஜி நகர், ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

2. மதுரமுரளி விஷயமாகவும், மிஷன் வெளியீடுகள், VCD, CD, கேசட்கள் விஷயமாகவும் e-mail அனுப்ப விரும்புபவர்கள் "publications@madhuramurali.org" என்ற e-mail IDக்கு அனுப்பவும்.

# பகவான் யோகிராமரும் சிறுமியும்

Courtesy : **ஸ்ரீ என். அப்பன் –** ஸ்ரீரங்கம்

பெரியோர்களையும், வறியவர்களையும், சாதுக்களையும் கண்டால் தன் சிறு பிஞ்சுக்கரங்களால் அரிசியையோ வேறு உணவுப் பொருட்களையோ கொடுத்து ஆனந்தப்படும் ஒரு சிறுமி கோமதி. அவள், 1960களில் திருவண்ணாமலை ரயில்வே ஸ்டேஷனில், ஸ்டேஷன் மாஸ்டராகப் பணிபுரிந்த திரு. குருராவ் அவர்களின் ஒரே மகள்.

ஏழை எளியவர்களுக்கும், சன்யாசிகளுக்கும் அடைக்கலம் கொடுக்கும் இடம் ரயில்வே ஸ்டேஷன்தானே! டிக்கட் இல்லாமல் வந்தவர்களை டி.டி.ஆர். வண்டியிலிருந்து இறக்கிவிட்டால் சிறு ஸ்டேஷன்களாக இருந்தால் ரயில்வே ஊழியர்களின் வீடுகளை விட்டால் அவர்களுக்கு வேறு போக்கிடம் ஏது? அந்த மாதிரி சிறு ஸ்டேஷன்களில் குருராவ் பணியில் இருந்து வந்தார். அப்போது உணவு கேட்டு வந்தவர்களை முகம் கோணாமல் குருராவும் அவரது மகளும் தங்கள் கையில் உள்ளதைக்கொடுத்து ஆனந்தப்படுவார்கள். நற்செயலும் நல்ல மனமும் கொண்ட தன் மகளைப் பற்றி பெருமிதம் கொள்வார் தந்தை குருராவ். வெகுநாட்களுக்குப் பிறகு பெரிய ஸ்டேஷனாகிய திருவண்ணாமலைக்கு மாற்றல் கிடைத்தது குருராவுக்கு.

அந்த நாட்களில், பகவான் ஸ்ரீ யோகிராம்சுரத்குமார், 1960களின் முற்பகுதியில் ரயில்வே ஸ்டேஷன், குட்ஸ்ஷெட், அதையடுத்த வயல்வெளிகளுக்கு வந்து செல்வார். ஸ்டேஷன் மாஸ்டர் குடியிருப்புப் பகுதிகளுக்கும் ஓரிரு சமயங்கள் வந்து தண்ணீர் வாங்கிக் குடிப்பதும் உண்டு. அப்படி வரும் சமயங்களில், கோமதி, அவருக்கு உணவு கொடுப்பது உண்டு. மறுக்காமல் யோகிராமரும் ஏற்றுக்கொள்வதும் உண்டு. கோமதிக்கு அவரிடம் ஒரு ஈர்ப்பு. தாயின் அன்பு அவளுள் சுரந்தது. இதுதான் விட்ட குறை தொட்ட குறை என்பதோ? பூர்வ புண்ணியத்தின் பயனோ?

கோமதிக்கு பள்ளியில் இந்தி பாஷை விருப்பப்பாடம். அவளுக்கு சரளமாக இந்தி பேசத்தெரியும். பகவான் யோகிராமரும்

இந்தியில் பேசி கோமதிக்கு இந்தியில் சிறந்த அறிவுத்திறனை வளர்த்தார். பகவான் யோகியை, யார்? என்று அவர்களுக்குத் தெரியாது. ''ஏதோ வடக்கத்திக்காரர், அன்பே வடிவானவர். அவருடன் பேசும்போது மனம் நிறைகிறது. மனம் சந்தோஷப்படுகிறது. அவருக்கு ஏதாவது என் கையால் உணவு செய்து கொடுக்க வேண்டும்'' என்றுதான் கோமதிக்குத் தெரியும். கோமதி ஒரு நாள் அவரைக் கேட்டேவிட்டாள், ''பெரியவரே! நீங்கள் வடநாட்டுக்காரர் போல் காணப்படுகிறீர்கள். சப்பாத்தி, சப்ஜீ செய்து தரட்டுமா?'' அன்புக்கு கட்டுப்பட்டவர் ஆயிற்றே அவர்! எத்தனை நாட்கள் பகவான் யோகியாரும் பக்தர்கள் தரும் பிஸ்கட்டையும், பழத்தையும் உண்டு நாளைக் கழித்தவர். எத்தனை நாட்கள் ஒன்றும் சாப்பிடாமல் ராமநாமமாகிய ராமரசத்தைப் பருகி உலகையே மறந்தவர். இருந்தபோதிலும் அன்புக் குழந்தையின் ஆசையைப் பூர்த்தி செய்ய உள்ளம் கொண்டார்.

சந்தோஷமாக கோமதியும், மிகச் சுவையாக சப்பாத்தி, சப்ஜீ செய்து பகவான் யோகியாருக்கு உணவளித்தாள். அவற்றை யோகியும் மனநிறைவுடன் ஏற்றுக்கொண்டார். குருராவும் அடிக்கடி தங்கள் குடும்பத்திற்கு விஜயம் செய்து சப்பாத்தி போன்ற கோதுமை உணவை ஏற்றுக்கொள்ளப் பிரார்த்தித்தார். சில வருடங்கள் ஓடின. உணவு அளித்தவர்கள் பெருமை கொள்ளவில்லை. கடமை எனக் கருதினர். உணவைப் பெற்றவர் தக்க தருணம் நோக்கி காத்திருந்தார்.

மஹான்களோ, சித்தர்களோ, யாருக்கும் கடமைப்பட்டவர்கள் இல்லை. அன்னதான பலன், அதை போஷித்தவர்களுக்கு உண்டு. பகவான் ஸ்ரீ யோகி ராம்சுரத்குமார் அந்தக் குடும்பத்தினர் மீது தனது அன்பையும், அருளையும் பொழிந்தார்.

1980ல் குருராவ் பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். கோமதியும் பட்டதாரியானாள். குடும்பத்துடன் ஸ்ரீரங்கத்தில் குடியேறினார் குருராவ். அடியேன் 1981-ல் ஒவ்வொரு அமாவாசைகளிலும் பகவான் யோகியாருடன் இருக்கும் பாக்கியம் பெற்றேன். பலமணி நேரம் ஆன்மீகம், உலக விவகாரங்கள், அரசியல் போன்ற விஷயங்களைப் பற்றி பேச்சு இருக்கும். அப்போதெல்லாம் குருராவ் பற்றியும், அன்புக் குழந்தை கோமதியைப் பற்றியும் பேச்சு எழும்.

பகவான் மனத்தில் இடம் பிடித்த பாக்கியசாலி குருராவ் யார்? என்று என் மனம் கேட்கும்.

பகவானே பேச்சைத் துவக்கினார், ''அப்பனே நீ ஸ்ரீரங்கத்தில்தானே இருக்கிறாய்? நீயும் ரயில்வேயில் பணி செய்பவன்தானே? அந்தக் குருராவைத் தெரியுமா?'' என்றார்கள். எனக்கு யாவரையும் தனிப்பட்ட முறையில் தெரியாது. ஆனால், குருராவைப் பற்றி அடுத்த முறை சந்தித்துத் தகவல் தெரிவிப்பதாகக் கூறினேன். ஸ்ரீரங்கத்தில் அனேகர், ரயில்வேயில் பணிபுரிந்து ரிடயர்டு ஆனவர்கள், எப்படியும் விசாரித்துத் தெரிந்துகொள்வோம் என்று வீட்டிலிருந்து கிளம்பினேன். பகவானின் ஆணையல்லவா! வேலை துரிதமாகவும் சிரமம் இல்லாமலும் நிறைவேறியது. மன்னார்ராவ் எதிர்பட்டார். இவரும் ரிடயர்டு ஸ்டேஷன் மாஸ்டர்தான். மேலும், இவரும் கன்னட மாத்வர். ஆகவே, இவருக்குத் தெரிந்திருக்க வழி உண்டு என்று எண்ணி ஆவலுடன் மன்னார்ராவைக் கேட்டேன்.

''உங்களுக்கு ஸ்டேஷன் மாஸ்டராக இருந்த குருராவைத் தெரியுமா? அவர் ஸ்ரீரங்கத்தில் இருப்பதாகக் கேள்விப்பட்டேன். அவர் விலாசம் தெரியுமா?''. அதற்கு மன்னார்ராவ் கூறியது எளியேனுக்கு வியப்பளித்தது. ''நேற்றுத்தான் அவரைச் சந்தித்தேன். அவருக்கு ஒரே பெண் கோமதி என்று பெயர். பி.ஏ. பட்டதாரி. நல்ல குணமும் அழகும் உடையவள். அவளைப் பெண் பார்க்க பெங்களூரிலிருந்து ஒரு பையன் பெற்றோர்களுடன் வந்தான். பையன் பி.ஈ. பட்டதாரி. வெளிநாட்டுக் கம்பெனியில் என்ஜினியராகப் பணிபுரிகிறான். அழகாகவும், நல்ல தோற்றம் உள்ளவனாகவும் காணப்படுகிறான். ஆனால், குருராவ் ஏழை. உத்தியோகத்தில் ஓகோ என்று எதுவும் சம்பாதிக்கவில்லை. வேறு பூர்வீகச் சொத்துக்கள் எதுவும் கிடையாது. பெரிய இடமாக இருக்கிறதே என்று தயங்குகிறார். பிள்ளைவீட்டார் ஊருக்குப் போய் தெரிவிப்பதாகச் சொல்லிப் போயிருக்கிறார்கள். அவர் குணத்திற்கு நல்லபடியாக பகவான் கிருபை செய்ய வேண்டும்'' என்று சொல்லி முடித்தார். நானும் விலாசம் அறிந்து குருராவை சந்தித்தேன்.

நல்ல விஷயம் என்று ஒரு நாள் லீவு போட்டுவிட்டு திருவண்ணாமலை போய் சன்னதித் தெரு வீட்டுக் கதவைத் தட்ட

முயன்றேன். அதற்குள் பகவான் யோகிராமர் கதவைத் திறந்து, ''அப்பன், வா, வா, உனக்காகத்தான் காத்திருக்கிறேன். குருராவைப் பார்த்தாயா? கோமதி நலமா?'' என்றார்கள். நடந்த விவரங்கள் யாவற்றையும் பகவானிடம் சொன்னேன். அவர்தானே யாவற்றையும் நடத்தி வைக்கின்றார். அப்படியிருக்க ஒன்றும் அறியாச் சிறுவன் போல் ஏன் நடிக்க வேண்டும்!

''அப்பன்! மீண்டும் குருராவைச் சந்தியுங்கள். அவரைக் கவலைப்பட வேண்டாம் என்று சொல்லுங்கள். எந்த சீர்வரிசையும் வரதட்சணையும் இல்லாமல் பெங்களூர் மாப்பிள்ளை கல்யாணம் செய்துகொள்வார் என்று சொல்லுங்கள். நீங்கள் போய் குருராவைச் சந்திக்கும்போது நல்ல செய்தி வந்திருக்கும். இந்தப் பிச்சைக்காரனுக்காக நீங்கள் குருராவைப் பார்த்து நடக்கும் விஷயங்களுக்கு தகவல் தெரிவியுங்கள்'' என்று பகவான் அன்புக் கட்டளையிட்டார். ஸ்ரீரங்கம் வந்து குருராவ் வீட்டிற்குச் சென்றபோது குருராவ், கோமதி இருவருமே சந்தோஷமாகக் காணப்பட்டார்கள். நடந்த விஷயத்தைக் கூறினேன்.

''அவர் ஒரு மஹானா? இவ்வளவு கருணையா எங்கள் மீது? நாங்கள் பிரதிபிரயோசனம் கருதாது அவருக்கு உணவளித்தோம். ஒரு வடநாட்டு சன்யாசியான அவருக்கு உணவு கொடுத்ததால் எங்களுக்கு திருப்தி கிடைத்தது. மனம் நிறைந்தது. அவர் ஒரு மஹான் என்று தெரிந்திருந்தால் முறைப்படி பிக்ஷை கொடுத்திருப்போமே!'' என்று குருராவ் சற்று விசாரத்துடன் தெரிவித்தார். ''தான் உகந்து, எந்தப் ப்ரதிபிரயோசனம் கருதாது, யாராக இருந்தாலும் உணவளிப்பதுதான் சிறந்தது. பகவத் சொரூபமான பகவான் யோகிராமருக்கு பல நாட்கள் உணவளித்தது நீங்கள் செய்த பாக்கியம். அந்தப் புண்ணியம் உங்களுக்கு மேன்மேலும் சகல சௌபாக்கியங்களைத் தரும்'' என்று நான் கூறினேன். அடுத்த 10 நாட்களில் திருமண நிச்சயதார்த்தம் தேதி குறித்து மாப்பிள்ளை வீட்டாரிடமிருந்து வந்த செய்தியை ராவ்ஜி தெரிவித்ததை பகவானுக்கு லெட்டர் மூலம் தெரிவித்தேன்.

மாப்பிள்ளை வீட்டார் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் சௌபாக்கியவதி கோமதியை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தனர்.

திருமண தேதியும் அன்றே குறிக்கப்பட்டது. குருராவுக்கு மட்டில்லா மகிழ்ச்சி, திருமணப்பத்திரிக்கை அடிக்கப்பட்டது. ''முதல் பத்திரிகையை பகவான் ஸ்ரீ யோகிராம்சுரத்குமாருக்கு அனுப்ப வேண்டும். அவர் விலாசம் வேண்டும்'' என்று குருராவ் என் வீட்டிற்கே வந்துவிட்டார். அவர் வேண்டுகோளின்படி பத்திரிகையை பகவான் யோகிராமரின் வீட்டிற்கே தபாலில் அனுப்பி வைத்தேன். எதிர்பாராமல் மறுநாளே, பகவான் யோகிராமரைப் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தது. அப்போது சௌபாக்கியவதி கோமதியின் திருமணப் பத்திரிகையை அடியேன் அனுப்பியதற்கு தனது நன்றியை பகவான் தெரிவித்துவிட்டு, ''என் சார்பில் நீ திருமணத்திற்குச் செல்ல வேண்டும். நீயும், உன் மனைவி ஜெயலட்சுமியும், தம்பதிகளாகப் போய் அட்சதைபோட்டு ஆசி கூற வேண்டும்'' என உத்திரவிட்டார்கள். எனது நண்பர் ஸ்ரீனிவாசனும் அப்போது அங்கிருந்தார். அவருக்கும் என்னுடன் திருமணத்திற்குப் போகச் சொல்லி உத்தரவாயிற்று. நாங்கள் மூவரும் திருமணத்திற்குச் சென்று தம்பதிகளை வாழ்த்திவிட்டு வந்தோம்.

சில மாதங்கள் கழித்து, பகவான் யோகிராமரை நானும், எனது மனைவியும், தரிசித்துவிட்டு ஸ்ரீரங்கம் திரும்பினோம். கை கொள்ளாத அளவு மல்லிகைப்பூ, ஆப்பிள்பழம், இரண்டையும் என்னிடம் கொடுத்து, ''கோமதி, ஸ்ரீரங்கத்தில் தானே இருக்கிறாள். அவளிடம் இதைச் சேர்ப்பித்துவிடு'' என்று கூறினார்கள். எனக்கு தூக்கிவாரிப்போட்டது! தனது மகள் திருமணத்தை முடித்த பின்னர் குருராவும் பெங்களூருக்கே போய்விட்டார். வயதான காலத்தில் தனியாக அவர் இருக்க வேண்டாம் என்று மருமகன் வற்புறுத்தியதன் பேரில் அவர்களுடன் பெங்களூர் சென்றுவிட்டார் என மன்னார்ராவ் கூறியது ஞாபகம் வந்தது. ஆனால், பகவானோ பூவையும், ஆப்பிள் பழத்தையும் கோமதியிடம் கொடு, என்று கூறுகிறாரே!

பூவையும், பழத்தையும் பத்திரமாக எடுத்துக்கொண்டு ரயிலில் வந்து ஸ்ரீரங்கம் பிளாட்பாரத்தில் இறங்கினோம். என்னே ஆச்சரியம்! குருராவ், கோமதி, அவள் தாயார் மூவரும் பெங்களூரிலிருந்து திருச்சி வந்து ஸ்ரீரங்கத்திற்கு சற்றுமுன் வந்த ரயிலிலிருந்து இறங்கி வீட்டிற்குப் போக வாடகை வண்டி பேசிக் கொண்டிருந்ததைக் கண்டோம். பகவான் கொடுத்த பூ, பழம் யாவற்றையும் ரயில்வே

ஸ்டேஷனிலேயே கோமதிக்குத் தந்தோம். அவர்களும் பகவானின் அருளை, கருணையை வியந்தனர். குருராவ், கோமதி தாயாகப் போவதாகச் சொன்னார். சகல விஷயங்களையும் தெரிவித்து பகவானுக்கு தபால் எழுதினேன். பெங்களூரில் நிரந்தரமாக தங்க இருப்பதால் தனது ஒரே சொத்தான வீட்டை விற்றுவிட்டுப் போகவும், தான் இருந்த வீட்டில் தனது மகளின் வளைகாப்பு வைபவத்தைச் செய்யவும் அவர் ஸ்ரீரங்கம் வந்தார். கோமதியின் வளைகாப்பிற்கு பரிபூரண ஆசியைத் தெரிவித்து பூவையும், பழத்தையும் பகவான் எளியேன் மூலம் அனுப்பியது பெரும் பாக்கியம் அல்லவா!!!

---

ஒவ்வொரு மாதமும் மதுரமுரளி இதழில் ஸ்ரீ ஸ்வாமிஜி, அந்த மாதத்தில் எங்கு இருப்பார் என்ற விவரம் முன்கூட்டியே தெரிவிக்கப்பட்டுவிடும். இதைத்தவிர, மற்ற நேரங்களில் ஸ்ரீ ஸ்வாமிஜியை தரிசனம் செய்யவேண்டும் என்றால் முன் அனுமதி பெற்றுக்கொண்டு தரிசிக்கலாம்.

கடிதங்களை நமது நிர்வாக அலுவலகத்திற்கு "Personal Secretary to H.H. Sri Sri Muralidhara Swamiji" என்று அனுப்ப வேண்டும். கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி கீழே தரப்பட்டு உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜியின் உதவியாளருக்கே கடிதங்களை அனுப்ப வேண்டும். அவர் ஸ்ரீ ஸ்வாமிஜியிடம் தெரிவிக்க வேண்டிய செய்திகளைத் தெரிவிப்பார். நமது மிஷனிற்கு E-mail address உள்ளது. ஸ்ரீ ஸ்வாமிஜிக்கு தனிப்பட்ட E-mail address கிடையாது.

கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

**"**Personal Secretary to **H.H. Sri Sri Muralidhara Swamiji"**
**Guruji Sri Muralidhara Swamigal Mission**
Premika Bhavanam,
New No.2, (Old No.24), Netaji Nagar,
Jafferkhanpet, Chennai - 600 083.
E-mail : contact@madhuramurali.org

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும் - 18 (தொடர்ச்சி)

இந்த லக்ஷ்மிசந்த்ரசேட்ஜிதான் ப்ருந்தாவனத்தில் இப்போதுள்ள புகழ்பெற்ற ரங்கஜீ மந்திரைக் கட்டியவர். கோவில் நிர்மாணங்களிலும் சாதுக்களுக்கு உணவளிப்பதிலும் லாலாபாபுவுக்குப் போட்டியாக இவர் திகழ்ந்தார். மேலும், ப்ருந்தாவனத்திலுள்ள சில நிலத்தின் சொத்துரிமைக்காக லக்ஷ்மிசந்த்ரன், லாலாபாபு மீது வழக்கு தொடுத்துத் தோற்றவர். இந்த விஷயங்களால் அவர் மீது தன்னையறியாமலே லாலாபாபுவுக்கு ஒரு காழ்ப்புணர்ச்சி இருந்து வந்ததால் பிக்ஷை எடுக்கும்போது ரங்கஜீ மந்திருக்கு செல்வதை அறவே தவிர்த்துவிடுவார். இது புரிந்துவிட்டது லாலாபாபுவுக்கு. உடனே, அன்று ரங்கஜீ மந்திருக்குச் சென்று பிச்சைக்காரர்களுடன் நின்றுகொண்டார். தோளில் பையுடன் கரதாளமிட்டுக்கொண்டு ஹரிநாமஸங்கீர்த்தனம் செய்துகொண்டிருந்த அழகான லாலாபாபுவை வாயில் காப்போன் அடையாளம் கண்டுகொண்டான். உள்ளே ஓடிச்சென்று சேட்டிடம், ''பாருங்கள்! இன்று லாலாபாபுவே உங்கள் கோவில் வாசலில் பிக்ஷைக்கு நிற்கிறார்!'' என்று பரபரப்புடன் கூறினான்.

சேட்ஜி அதிர்ந்துவிட்டார். உடனே, தன்னை சுதாரித்துக் கொண்டு ஒரு பெரிய அழகிய தட்டில் விதவிதமான உணவுகளும் நூறு தங்கக் காசுகளும் வைத்து எடுத்துக்கொண்டு வாசலில் வந்து பாபாவை வணங்கி, ''பாபாஜி! உங்கள் வருகையால் இந்த இடத்தைப் புனிதப்படுத்தியது பற்றி மிகவும் சந்தோஷமடைகிறேன். இந்தத் தட்டை ஏற்று ஆசீர்வதியுங்கள்'' என்று பணிவுடன் கூறினார்.

லாலாபாபு, ''சேட்ஜி! நான் உங்களிடம் பிக்ஷைக்குத்தான் வந்திருக்கிறேன். நீங்கள் தருவது பிக்ஷையில்லையே!'' என்றார்.

சேட்ஜி, ''நீங்கள் கூறுவது சரிதான்! நான் தருவது பிக்ஷை இல்லைதான். வெளியிலே பிச்சைக்காரனானாலும் நீங்கள் ராஜாவாயிற்றே! ராஜாவுக்கு பிக்ஷை அளிக்கும் தகுதி எனக்குக் கிடையாது! நான் உங்களிடம் தகராறு செய்துகொள்ளும் அளவுக்கு முட்டாள். இருமுறை நீங்கள் என்னை வென்றுவிட்டீர்கள். முதன்முறை எனக்குச் சொந்தமானது என்று நான் கருதிய பூமியை

ஜெயித்தீர்கள். இப்பொழுது நீங்கள் என் மனதை வென்று விட்டீர்கள். நீங்கள் இப்போது என் மனதின் சக்கரவர்த்தி! நான் இப்போது தருவது பிக்ஷையல்ல! காணிக்கை! என் இதயத்தை வென்ற ராஜாவுக்கு, அதை அங்கீகரித்து நான் அளிக்கும் எளிய காணிக்கை!'' என்று உருக்கமாகச் சொன்னார்.

''இல்லை, இல்லை, சேட்ஜி, பிச்சைக்காரன் என்றுமே பிச்சைக்காரன்தான். எனக்கு இந்த பரிசெல்லாம் தகுதியற்றவை. ஒரு கைப்பிடி அரிசியை எனக்கு இந்தத் தட்டிலிருந்து தாருங்கள். அதுபோதும்! தெரிந்தோ தெரியாமலோ நான் உங்களுக்கு எந்த விதத்திலாவது அபராதம் செய்திருந்தால் அதை மன்னித்து என்னை ஆசீர்வதியுங்கள். அதனால், என் மனம் தூய்மையடைந்து, க்ருஷ்ணப்ரீதி எனக்கு கிட்டட்டும் என ஆசீர்வதியுங்கள்'' என்று கூறி கண்ணீர் பெருக்கினார். சேட்ஜியும் அழ ஆரம்பித்தார். இருவரும் ஒருவரை ஒருவர் இறுகத் தழுவிக்கொண்டு கண்ணீர்விட்டனர். அன்பு நதி பெருகி ஓடியது.

லாலாபாபு பிக்ஷை முடிந்து தன் குகைக்குத் திரும்பும்போது எங்கிருந்தோ திடீரென்று க்ருஷ்ணதாஸ்பாபா எதிரில் தோன்றினார். அவர் முகத்தில் அர்த்தமுள்ள மந்தஹாஸம் விளையாடியது. லாலாபாபு தண்டம் போல் கீழே விழுந்து நமஸ்கரித்தார். லாலாபாபுவை க்ருஷ்ணதாஸ் அன்புடன் தட்டிக்கொடுத்து, ''மகனே! உனக்கு தீக்ஷை நேரம் நெருங்கிவிட்டது!'' என்றார். லாலாபாபுவின் ஆனந்தத்துக்கு எல்லையேது! குரு இப்போது ஒரு நல்ல முகூர்த்தத்தில் லாலாபாபுவுக்கு தீக்ஷை அளித்து, ''நீ உன் குகைக்குச் சென்று சாதனை புரிந்துவா! க்ருஷ்ண தர்சனம் ஏற்படும் வரை வெளியே வராதே. யாரையும் பார்க்காதே'' என்றார். அதைக் கேட்ட லாலாபாபு நேரே குகைக்குச் சென்றார். குரு உபதேசத்தின்படி கடுமையாக சாதனை புரிந்தார். சில வருஷங்களில் க்ருஷ்ண தர்சனம் ஏற்பட்டு அவரது இதயம் க்ருஷ்ணன் கோவிலாக மாறியது! அங்கு எந்நேரமும் ராதா க்ருஷ்ண லீலைகள் விரிந்து காட்சிகள் கிடைத்தது.

லாலாபாபு வ்ரஜத்தில் சித்த புருஷராக புகழ்பெற்றார். அவரிடம் அனேகர் தர்சனத்திற்கும் உபதேசத்திற்கும் வந்தனர். சிந்தியா மஹாராஜாவும் அவரிடம் வந்தார். லாலாபாபுவை வணங்கி தீக்ஷை வேண்டினார். லாலாபாபு, ''மஹாராஜா! தீக்ஷை மட்டும் போதாது!

க்ருஷ்ணன், இரு கைகளையும் நீட்டிக்கொண்டு அவன் முன்பு வேண்டினால்தான் வருவான். உலகை ஒரு கையால் பிடித்துக் கொண்டு மற்றொரு கையால் அவனைத் தொட விரும்பினால் அவனை என்றுமே தொடமுடியாது! இரு கைகளையும் விரித்து அவனை நோக்கிச் செல்லத் தயாராக இருக்கிறீர்களா?'' என்று வினவினார்.

சிந்தியா மஹாராஜா அதற்குத் தயாராக இல்லை. எனவே அவர், ''பாபா! நீங்கள் கூறுவது சரிதான்! இந்தப் பாதை என் போன்ற லோகாயதர்களுக்கு அல்ல'' என்று கூறி பாபாவை நமஸ்கரித்துவிட்டு சென்றார்.

ஒருநாள் லாலாபாபு தன்னைச் சூழ்ந்த மனிதர்களிடம் தன்னை யமுனைக் கரைக்கு அழைத்துச் செல்லுமாறு பணித்தார். அங்கு க்ருஷ்ண நாமத்தை ஜபித்துக்கொண்டே க்ருஷ்ண லீலையை மனதில் தரிசித்துக்கொண்டே இந்த மானுட சரீரத்தை இலை உதிர்வது போல் உதிர்த்தார்!

இன்றும் ப்ருந்தாவனத்தில் லாலாபாபு கோவில் உள்ளது! க்ருஷ்ணசந்த்ரமா நம்மை அன்புடன் பார்த்து தர்சனம் தருகிறான்! அடுத்த முறை ப்ருந்தாவனம் செல்லும் போது க்ருஷ்ணனுடன் லாலாபாபுவையும் ஸ்மரித்துக்கொள்வோம்.

(தொடரும்)

**— ஜயந்தி ஜானகிராமன்**

Visit us at www.madhuramurali.org for

1. Detailed reports of major mission / satsang events with pictures viz. Utsavams, Samprokshanams, Thirthayatras, Bhagavatha Sapthaham.
2. Online Spiritual magazine "Madhura Murali" every month in English/Tamil.
3. Satsang news & updates on mission activities.
4. Sri Swamigal's lectures/essays
5. Articles on religion, Philosophy, lives of saints.
6. Downloadable free audio "Hare Rama......." Mahamantra chanting rendered in various raagas & more.

# ஸ்ரீ ஸ்வாமிஜியின் ஸம்பாஷணைகளிலிருந்து - 101

ப்ரேமபூர்வமான பக்தி குருவிடம் இருந்தால்தான், அவர் உபதேசம் செய்யும் மார்க்கம் புரியும். அதனாலேயேதான் உத்தமமான ஸ்திதியை அடைய முடியும். ரமண மஹரிஷிகளின் சரித்திரத்தை தெரிந்துகொள்வதனால், அவரிடம் ப்ரேம பூர்வமான பக்தி ஏற்பட்டு, அவருடைய ஜயந்தி மஹோத்ஸவங்களை கொண்டாடுகிறோம். அவரோ திருவண்ணாமலையை விட்டு எங்கும் செல்லாமல், பரம விரக்தராய் வாழ்ந்தார். அப்படி இருக்க, அவருடைய ஜயந்தியைக் கொண்டாடுவது அவருக்கு பிடிக்குமா? எனும் கேள்வி எழும். ரமண மஹரிஷிகளுக்கு பிடித்தது, பிடிக்காதது என்பது இல்லாததினால் அவருடைய ஜயந்தியைக் கொண்டாடுவது, அவருக்கு பிடிக்குமா? என கேட்பதும் தவறு.

''அவருக்குதான் பிடிக்கும், பிடிக்காதது என்று இல்லையே, ஆதலால், எதை வேண்டுமானாலும் செய்யலாமே. எதுவும் அவருக்கு ஸம்மதம்தானே'' என்று சொல்ல முடியாது. காரணம், அது சாஸ்த்ர சம்மதமாக இருக்க வேண்டும். நம் மதத்தில் ஸ்ரீராமநவமி, கோகுலாஷ்டமி, ஆதிசங்கரர் ஜயந்தி போன்றவற்றைக் கொண்டாடுகிறோம். நம் ஸனாதனமான மதத்தில் இப்படி பகவானின் ஜயந்தியையும், மஹான்களின் ஜயந்தியையும் கொண்டாடி வந்துள்ளோம். ஆகவே, நமது ஸமகாலத்தில் வாழ்ந்த, ஒரு மார்க்கதரிசியாக இருக்கக்கூடிய ஸ்ரீரமண மஹரிஷிகளின் ஜயந்தியை அவசியம் கொண்டாட வேண்டும். அதுவே, நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதற்கு சரியான முறை.

சாஸ்திர சம்மதமாக ஜயந்தியைக் கொண்டாட வேண்டும் என்றோம். ஆனால் ரமண மஹரிஷிகள் சாஸ்திரப்படி வாழவில்லை என பலருக்கு அபிப்ராயம் உள்ளது. அது தவறு. இதை ஒரு யுக்தி மூலம் சொல்ல முடியும். ஒருவன் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என மிகக் கீழ்த்தரமான ஒரு வாழ்க்கையை நடத்துகிறான். மற்றொருவன் சத்சங்கத்திற்கு வருகிறான். நாமஜபம் செய்கிறான்.

முந்தியவனைக் காட்டிலும் இவன் சிரேஷ்டமானவன் (உயர்ந்தவன்). மூன்றாவதாக ஒருவன் விபூதியை தரித்துக்கொண்டு திரிகால சந்தியாவந்தனாதிகளைச் சரியாகச் செய்து வருகிறான். இரண்டாமவனைக் காட்டிலும் இவன் உயர்ந்தவன். அதே போல், மற்றொருவன் சிகையும், கச்சமும் வைத்து அக்னிஹோத்ரம், ஔபாஸனம் செய்து வருவானாகில் முந்தியவர்களை விட இவனே உயர்ந்தவன். அக்னிஹோத்ரங்கள் செய்து, கிருஹஸ்தனுக்குரிய யாகங்களைப் பூர்த்தி செய்தால், அவன் தீக்ஷிதர் என பட்டம் பெற்று மேலும் உயர்ந்தவனாகிறான். அவன் வானப்ரஸ்தாஸ்ரமம் எடுத்துக் கொண்டு (சன்யாஸம் பெறும் முன் ஒருவன் பக்குவம் பெற பெறும் ஆஸ்ரமம்) அதன்படி வாழ்வானே எனில், அவன் மேலும் உயருகிறான். அவன் சன்யாச ஆஸ்ரமம் பெற்று, விவேக, வைராக்கியங்களுடன் கூடி ஆத்மசாதனைகளைப் பழகுவானே எனில், அவன் ஆத்மதரிசனத்திற்கு உத்தம அதிகாரி எனப்படுகிறான்.

அவன் ஆத்மவிசாரம் செய்து, ஆத்மசாக்ஷாத்காரத்தை அடைவானே எனில், அவனில் உயர்ந்தவனில்லை. அவன் அதி ஆஸ்ரமியாகிறான். (சன்யாஸ ஆஸ்ரமத்தையும் அவன் துறக்கிறான்). சாஸ்திரப்படி, இதுவே மிக உயர்ந்த நிலை. இந்த உச்ச நிலையில்தான் பகவான் ரமணமஹரிஷிகள் வாழ்ந்து வந்தார். அதனால் அவர் சாஸ்திர சம்மதமாக வாழ்ந்தார் என்பதே உண்மை. ''அவரை சாஸ்திரப்படி வாழவில்லை என சொல்பவர்களுக்கு, சாஸ்திரம் என்றால் என்ன என்று தெரியவில்லை'' என சொல்வது தகும். உத்தம ஸ்திதியில்தான் இவர் இருந்தார் என்பதற்கு என்ன பிரமாணம் என்றால், ஜடபரதர், சுகாச்சார்யாள் போன்ற அநேக மஹாத்மாக்கள் இப்படி அதியாஸ்ரமியாகத்தான் வாழ்ந்துள்ளனர். தத்தாத்ரேயர், ஸதாசிவ ப்ரும்மேந்திரர் போன்றோரும் இப்படியே இருந்துள்ளனர். மேலும், இப்படி ஒரு ஞானியைப் பார்ப்பது மிகவும் துர்லபம். (Almost impossible). உலகில் பல பக்தர்கள், சித்தர்கள், பாகவதர்களைப் பார்க்கலாம். ஆனால், உத்தமமான ஜீவன் முக்தி ஸ்திதியை அடைந்து, தான் வேறு அல்ல, பகவான் வேறு அல்ல என்று இருக்கக்கூடிய ஞானியைப் பார்ப்பது மிகவும் துர்லபம். ஜீவன்முக்தி நிலையை 32 படிக்கட்டுகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அதில் ஒருவர் 31 படி வரை ஏறி இருந்தாலும்

கூட, பின்னர் 'பல்டி' அடித்து சறுக்கி விழலாம். மாயையானது அவ்வளவு பொல்லாதது. ஆதலால் ஜீவன்முக்தனைக் காட்டிலும் சிரேஷ்டமானவனில்லை.

இம்மாதிரி மஹாத்மாக்களைப் பற்றிய சரித்திரங்கள் மற்றொன்றையும் ஊர்ஜிதப்படுத்துகின்றன. சகோரபக்ஷி என்று ஒன்று இருந்ததாகப் புராணம் கூறுகிறது. அது சந்திரனைப் பார்த்து ஸதா கூவிக்கொண்டே இருக்கும் என்கின்றனர். அநேக பக்தர்கள் இதை உதாரணமாகத் தங்களது பாடல்களில் கூறுகின்றனர். கவரிமான் என்று ஒரு வகை மான். அது தனது உடலிலிருந்து ஒரு முடி விழுந்தாலும், அது தனது உயிரை நீத்துவிடும் என்கின்றனர். ஹம்ஸ பக்ஷி என்று ஒன்று இருந்துள்ளது. பாலையும், தண்ணீரையும் சேர்த்து வைத்தால், இந்த பக்ஷி பாலை மட்டுமே எடுத்துக்கொண்டு மீதியை அப்படியே வைத்துவிடும். இன்று இந்த பக்ஷிகளையோ, மிருகத்தையோ காணக்கிடைப்பதில்லை. இன்றைய சந்ததியினரிடம் இவற்றைப் பற்றி சொன்னால், இப்படி ஒன்று இருந்திருக்கலாம் என்பதை ஏற்க மறுக்கின்றனர். காரணம், ஒரு விஷயம் நூல்களில் (Book) மட்டும் ஜீவித்து வந்தால் போதாது.

அதுபோல், நமது வேதாந்த கிரந்தங்கள், தசஸ்லோகி, ஸதஸ்லோகி, அத்வைத ஸித்தி, ப்ரும்மசூத்ர பாஷ்யம் என எதுவாக இருந்தாலும், மேற்கண்ட கிரந்தங்களில், ''ப்ரும்மானந்தம் என்று ஒன்று உள்ளது. அப்பொழுது ஸமாதி ஏற்படும். இதுவே, ஆத்மானந்தம். அதற்கு சமம் ஒன்றுமில்லை. ப்ரும்மானந்தத்தை அடைந்த ஞானி ஒரு "Dynamic silenceல் இருப்பான்'' என்று இருக்கிறது. கீதையிலும் கிருஷ்ணன், ஸ்திதப்ரக்ஞனின் நிலையைத் தெளிவாக எடுத்துக் கூறுகிறான். இதை எவ்வளவு தூரம் படித்தும், கேட்டும் வந்தாலும் கூட, இத்தகைய ஜீவன்முக்தி நிலையை அடைந்த ஒருவரை நேருக்கு நேர் பார்க்கவில்லை எனில், இவை கட்டுக்கதை என்று தோன்றிவிடும். ஆதலால், இதுபோல், வேதாந்த கிரந்தங்களில் சொல்லியுள்ள ஒரு பூரண நிலையில் ஒரு மஹாத்மா ப்ரத்யக்ஷமாக வாழ்ந்து காண்பித்தால்தான் இப்படி ஒரு நிலை உண்டு என நம்ப முடியும்.

(தொடரும்)

# செய்திகள்

**டிசம்பர் 26-ந் தேதி**

திருச்சி அருகில் உள்ள குளித்தலை, மணத்தட்டை அக்ரஹாரத்தில், மாலை 6.30 மணி முதல் இரவு 8.30 மணி வரை ஸ்ரீ ஸ்வாமிஜி உபன்யாசம் நிகழ்த்தினார்கள்.

**டிசம்பர் 28-ந் தேதி**

ஓசூர், ஸ்ரீ தாசப்பா கல்யாண மஹாலில், ''ஸ்ரீ ராதா கிருஷ்ண பஜன் மண்டலி டிரஸ்ட்'' சார்பில் காலையில் நடைப்பெற்ற ஸ்ரீ ராதா கல்யாண மஹோத்ஸவத்தில் ஸ்ரீ ஸ்வாமிஜி கலந்துகொண்டார்கள். அன்று மாலை 6.00 மணி முதல் 7.30 மணி வரை ஸ்ரீ ஸ்வாமிஜி உபன்யாசம் நிகழ்த்தினார்கள்.

**டிசம்பர் 31-ந் தேதி**

சென்னை, மஹாலிங்கபுரம், ஸ்ரீ குருவாயூரப்பன் திருக்கோயிலில் இரவு 7.00 மணி முதல் 9.00 மணி வரை ஸ்ரீ ஸ்வாமிஜியின் உபன்யாசம் நடைப்பெற்றது.

**ஜனவரி 1-ந் தேதி**

ஆங்கில புத்தாண்டை முன்னிட்டு, சென்னை ப்ரேமிகபவனம் மற்றும் மஹாரண்யம் மதுரபுரி ஸ்ரீ கல்யாணஸ்ரீநிவாஸ பெருமாள் ஸன்னதியிலும் சிறப்பு பூஜைகள் நடைப்பெற்றன. பக்தர்களுக்கு ப்ரசாதம் வினியோகிக்கப்பட்டது.

**ஜனவரி 2-ந் தேதி**

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜெயந்திர ஸரஸ்வதி ஸ்வாமிகள், சென்னை ப்ரேமிகபவனத்திற்கு காலை 10.00 மணியளவில் விஜயம் செய்தார்கள்.

**ஜனவரி 3-ந் தேதி — ''வைகுண்ட ஏகாதசி''**

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு, ஸ்ரீ ஸ்வாமிஜி காலை 5.00 மணி அளவில், மதுரபுரி ஆஸ்ரமத்தில், ஸ்ரீ மாதுரீ ஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனுக்கு திருமஞ்சனம் செய்தார்கள். தனுர் மாத பூஜையும் நடைப்பெற்றது. ஆஸ்ரம வளாகத்தை அடுத்துள்ள மதுரபுரி ஸ்ரீ கல்யாண ஸ்ரீநிவாஸ பெருமாள் திருக்கோயிலில், காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை அகண்ட ''ஹரே ராம....'' நாம ஸங்கீர்த்தனம் நடைப்பெற்றது.

மாலை 6.00 மணி அளவில் ஶ்ரீ மாதுரீ ஸகீ ஶ்ரீ ப்ரேமிகவரதன் கருட வாகனத்தில் எழுந்தருளினார். இரவு 9.00 மணி முதல் விடியற்காலை வரை ''திவ்ய நாமகீர்த்தனம் நடைப்பெற்றது.

சென்னை ப்ரேமிகபவனத்திலும் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு இரவில் அகண்ட நாமகீர்த்தனம் நடைப்பெற்றது.

### ஜனவரி 5-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை

மதுரை, மேல மாசி வீதி, ஶ்ரீ மதனகோபாலஸ்வாமி திருக்கோயிலில், தினமும் இரவு 7.00 மணி முதல் 9.00 மணி வரை ஶ்ரீ ஸ்வாமிஜி உபன்யாஸம் நிகழ்த்தினார்கள். திரளான பக்தர்கள் கேட்டு ஆனந்தத்தில் மூழ்கினர்.

### ஜனவரி 11-ந் தேதி

சென்னை, நங்கநல்லூர், ஶ்ரீ ரமண ஸத்சங்கத்தில் இரவு 7.00 மணி முதல் 8.30 மணி வரை ஶ்ரீ ஸ்வாமிஜி உபன்யாஸம் நிகழ்த்தினார்கள்.

### ஜனவரி 13-ந் தேதி

சென்னை ப்ரேமிகபவனத்தில், ஶ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளின் ஆராதனையை முன்னிட்டு மாலை 6 மணி முதல் 8 மணி வரை ஶ்ரீ நாராயணஸ்வாமி மற்றும் அவரது சிஷ்யர்களின் ''பஞ்சரத்ன கீர்த்தனைகள்'' நடைப்பெற்றன.

### ஜனவரி 14-ந் தேதி வரை

தனுர் மாத பூஜை நடைபெற்றது.

### ஜனவரி 18-ந் தேதி

பெங்களூர் மல்லேஸ்வரம் ''ராம மந்திரத்தில்'' மாலை 6.00 மணி அளவில் ''பக்த விஜயம் உபன்யாஸ மேளா''வை ஶ்ரீ ஸ்வாமிஜி துவக்கி வைத்தார்கள்.

### ஜனவரி 22-ந் தேதி

ஶ்ரீ ஸ்வாமிஜி, வேலூர் D.K.M. கல்லூரிக்கு மாலை 3.00 மணிக்கு விஜயம் செய்து, அருளாசி வழங்கினார்கள். வேலூர் மாவட்டம், குடியாத்தம் ஶ்ரீ வீர ஆஞ்சநேயர் கோவில் வளாகத்தில் இரவு 7.00 மணி அளவில் ஶ்ரீ ஸ்வாமிஜி உபன்யாஸம் நிகழ்த்தினார்கள்.

### ஜனவரி 23-ந் தேதி

குடியாத்தம், ஶ்ரீ வீர ஆஞ்சநேயர் திருக்கோயில் கும்பாபிஷேகம், காலை 9.30 மணி அளவில் ஶ்ரீ ஸ்வாமிஜியின் முன்னிலையில் நடைப்பெற்றது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டார்கள்.

**மங்களானி பவந்து**